# இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை உலகளாவிய பருவகால மீளாய்வில் பரிசீலிக்கப்படும்

**ஜெனீவா (2023 ஜனவரி 27, வெள்ளிக்கிழமை)** - இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை 2023 பெப்ரவரி 01ஆம் திகதி, புதன்கிழமை நான்காவது தடவையாக ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் உலகளாவிய பருவகால மீளாய்வு (UPR) செயற்குழுவினால் பரிசீலனை செய்யப்படவிருக்கின்றது. இதற்கான கூட்டம் இணைய வலைத்தளம் மூலம் உடனுக்குடன் காண்பிக்கப்படும் webcast live.

ஜனவரி 23 முதல் பெப்ரவரி 03 வரை நடைபெறவிருக்கும் அமர்வில் UPR செயற்குழுவினால் மீளாய்வு செய்யப்படவிருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது UPR மீளாய்வுகள் முறையே 2008 மே, 2012 ஒக்டோபர், 2017 நவம்பர் ஆகிய காலங்களில் இடம்பெற்றன.

மீளாய்வுகள் பின்வரும் ஆவணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளன: (1) தேசிய அறிக்கை – மீளாய்வுக்குரிய நாட்டினால் வழங்கப்பட்ட தகவல்கள்; (2) விசேட நடைமுறைகள் என்று அறியப்படும் சுயாதீன மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் அமைப்புகள், மனித உரிமைகள் ஒப்பந்த அமைப்புகள் மற்றும் வேறு ஐ.நா. அமைப்புகளினதும் அறிக்கைகளில் அடங்கியுள்ள தகவல்கள்; தேசிய மனித உரிமைகள் அமைப்புகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் உள்ளிட்ட ஏனைய பங்காளிகளினால் வழங்கப்பட்ட தகவல்கள்.

இலங்கை பற்றி பெப்ரவரி 01இல் இடம்பெறவிருக்கும் மீளாய்வுக்கு அடிப்படையாக அமையவிருக்கும் மூன்று **அறிக்கைகளையும் இங்கு** பார்வையிடலாம்.

**நிகழ்விடம்:** அறை 20, பலே டி நெஸ்யோன் ( Palais des Nations), ஜெனீவா

**நேரமும் திகதியும்:**: 09.00 – 12.30, புதன்கிழமை, 2023 பெப்ரவரி 01 (ஜெனீவா நேரம், GMT +1 மணித்தியாலம்)

UPR என்பது சகல 193 ஐ.நா. அங்கத்துவ நாடுகளினதும் மனித உரிமைகள் தொடர்பான நிலைமையைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யும் ஒரு தனித்துவமான நடைமுறையாகும். 2008 ஏப்பிரலில் இடம்பெற்ற முதலாவது கூட்டத்தைத் தொடர்ந்து, முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது UPR சுற்றுவட்டங்களில் சகல 193 ஐ.நா. அங்கத்துவ நாடுகளும் மூன்று தடவைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. நான்காவது UPR சுற்றுவட்டத்தின்போது, சகல அரசாங்கங்களும் முன்னைய மீளாய்வுகளின்போது செய்யப்பட்ட பரிந்துரைகளை பின்பற்றுவதற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற தாம் எடுத்துள்ள நடவடிக்கைகளை எடுத்துக்கூறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தத்தமது நாட்டில் மனித உரிமைகள் தொடர்பான சமீபத்திய மாற்றங்களும் எடுத்துக்கூறப்படும்.

இந்த அமர்வில் பங்குபற்றும் இலங்கையின் தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்குவார்.

அல்ஜீரியா, பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியம், கட்டார் என்பனவை இலங்கையின் மீளாய்வுக்கான அறிக்கையிடல் பிரதிநிதிகளாகப் பணியாற்றும் நாடுகள் ("troika") ஆகும்.

அமர்வின் **webcast** ஐ பார்வையிடுவதற்கு - https://media.un.org/en/webtv/schedule/2023-02-01

மீளாய்வின்போது பேசவிருப்பவர்களின் பட்டியலும் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மற்றும் கிடைக்கக்கூடிய சகல அறிக்கைகளும் UPR Extranet இல் இடுகை செய்யப்படும்.

UPR செயற்குழுவானது பெப்ரவரி 03ஆம் திகதி 16.30 மணிக்கு இலங்கைக்கான பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. பரிந்துரைகள் சம்பந்தமான தமது நிலைப்பாட்டினை வெளியிட மீளாய்வுக்குரிய அரசாங்கத்திற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

// முடிவு //

*மேலதிக தகவல்களுக்கும் ஊடக வேண்டுகோள்களுக்கும் தயவுசெய்து தொடர்புகொள்ளவும் ரொலான்டோ கோமஸ், HRC ஊடக அலுவலர் rolando.gomez@un.org, மத்தியூ (Mathew) பிறவுண், HRC பொது தகவல் அலுவலர்.- matthew.brown@un.org, அல்லது பஸ்கல் சிம், HRC பொது தகவல் அலுவலர்.- simp@un.org.*

*உலகளாவிய காலாகால மீளாய்வு பற்றிய மேலதிக விபரங்களுக்கு, பிரவேசிக்கவும்:* https://www.ohchr.org/en/hr-bodies/upr/upr-main.

**ஐ.நா. மனித உரிமைகள் சபை, எங்களை பின்வரும் சமூக ஊடகங்களினூடாகப் பின்தொடரலாம்:**

Facebook | Twitter | YouTube | Instagram